DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

––––

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மரு.அருண் | Father/Husband Name : ராமசாமி |
| Age : 40 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22 July 2025

(Accused Present)

**<u>முதல் விசாரணை</u> :–**

1. நான் தற்போது தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை ஆலோசகராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 03.12.2018ம் தேதி சாத்தூர் அரசு மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது அதே தினத்தில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்த கர்ப்பிணி பெண் திருமதி.[redacted](அ.சா.1) என்பவருக்கு இரத்தம் செலுத்துவதற்கான மருத்துவர் மீரா அவர்களின் அறிவுரைப்படி, கர்ப்பிணி [redacted]வின் கணவர் [redacted] என்பவர் சிவகாசி அரசு மருத்துவமனை இரத்த வங்கியிலிருந்து பெற்றுவந்த O+ பிரிவை சார்ந்த இரத்த பேக்கை அதனுடன் கொடுத்தனுப்பட்ட Blood Cross Match form –யை பெற்று Blood Bag ல் உள்ள நம்பரையும் படிவத்திலுள்ள Bag நம்பரையும் சரிபார்த்து மேலும் Blood Bag ல் குறிப்பிட்டிருக்கும் இரத்தவகையையும், படிவத்தில் குறிப்பிட்டிருந்த இரத்த வகையையும் சரிபார்த்து இரண்டும் சரியாக இருந்ததால் Blood Transfusion Note Book ல் பதிவு செய்து, அந்த இரத்தத்தை செவிலியர் வைதேகியிடம் கொடுத்து கர்ப்பிணி [redacted]வின் உடம்பில் செலுத்த அறிவுரை வழங்கினேன். முத்துவிற்கு இரத்தம் செலுத்த செவிலியர் வைதேகிக்கு செவிலியர்கள் பரமேஸ்வரி மற்றும் பேச்சியம்மாள் உதவியாக இருந்துள்ளார்கள்.

3. என்னிடம் காட்டப்படும் ஆவணம் Blood Transfusion Note Book உண்மை நகல் ஆகும். அதில் கர்ப்பிணி [redacted] என்பவருக்கு Blood Bag எண்.4029 ல் உள்ள இரத்தம் ஏற்றப்பட்டது என்பதற்கான என்னால் செய்யப்பட்ட பதிவு காணப்படுகிறது. அந்த ஆவணம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் கர்ப்பிணி [redacted]விற்கு இரத்தம் ஏற்ற ஆரம்பித்ததிலிருந்து இரத்தம் ஏற்றி முடிக்கும் வரை எவ்விதமான தொந்தரவும் இல்லை என்பதற்கான என்னால் பதிவு செய்யப்பட்ட மருத்துவ குறிப்புகளின் நகல் ஆகும். (**<u>அந்த ஆவணம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**). என்னிடம் காட்டப்படும் ஆவணம் சிவகாசி அரசு மருத்துவமனையில் இருந்து வாங்கி வந்த Blood Bag எண்.4029 உடன் இணைந்து வந்த Blood Cross Match form நகல் ஆகும். (**<u>அந்த ஆவணம் அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**). (மேற்படி ஆவணங்கள் நகல் என்பதால் அதை குறியீடு செய்ய முடியாது என்று எதிரி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. அந்த ஆவணங்களின் அசல் மருத்துவமனையில் இருக்கும் என்று சாட்சி கூறுகிறார். ஆகையால், மேற்படி ஆட்சேபனைக்கு உட்பட்டு நகல் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. அசல் ஆவணங்களை அரசு தரப்பில் தாக்கல் செய்ய அறிவுறுத்தப்படுகிறது)

4. கர்ப்பிணி [redacted]விற்கு இரத்தம் ஏற்றும்போது எந்தவிதமான உடல் பாதிப்புகள் இல்லை. அதன் பின்னர் 2 தினங்கள் கர்ப்பிணி [redacted] மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று 05.12.2018ம் தேதி அன்று சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார். பின்னர் 17.12.2018 அன்று கர்ப்பிணி [redacted] மீண்டும் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தபோது அவருக்கு இரத்த பரிசோதனை செய்ததில் HIV பாதிப்பு ஏற்பட்டிருந்த விவரம் தெரியவந்தது.

5. கடந்த 03.12.2018ம் தேதி கர்ப்பிணி [redacted]விற்கு செலுத்துவதற்காக சிவகாசி அரசு மருத்துவமனை இரத்த வங்கியிலிருந்து பெறப்பட்ட இரத்தத்தில் HIV கிருமிகள் இருந்துள்ளது. அந்த இரத்தம் சிவகாசி சரஸ்வதிபாளையத்தை சேர்ந்த ரமேஷ் என்ற இளைஞரிடமிருந்து தானமாக பெறப்பட்ட இரத்தம் என்பதும், அந்த இரத்தத்தில் தான் HIV கிருமிகள் இருந்துள்ளது என்றும் அந்த இரத்தத்தை கர்ப்பிணி [redacted]விற்கு ஏற்றியதன் விளைவாக முத்தவிற்கு HIV பாதிப்பு ஏற்பட்டுள்ள விவரம் தெரியவந்தது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>நீதிமன்ற கேள்வி:</u>** இரத்த வங்கியில் இருந்து வாங்கி வரப்படும் இரத்ததை நோயாளிக்கு ஏற்றுவதற்கு முன்பு அந்த இரத்ததில் கிருமி தொற்று இருக்கிறதா? என்பதை மருத்துவர் பரிசோதனை செய்ய வேண்டுமா?

**<u>பதில்:</u>** இல்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – (இல்லை)</u>**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur.